தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1969 செப்டம்பர் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 226, 227, 228 நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

Officers granted extension of service

* 229 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the number of Gazetted Officers and the names of incumbents who have been given extension of service in Education Department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சட்டப் படிப்புத் துறை இயக்குநரின் செயலாளராகிய திரு. ஜே. வைகுந்த பட் என்னும் ஒரே ஒரு அதிகாரிக்குமட்டும் 5—12—1966 முதல் 4—12—1969 வரையில் பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, usually we find in several departments including the Education Department a number of persons being given extension beyond the age of retirement. At the same time the Government have come forward with a proposal for reducing the age of retirement to enable the unemployed persons to get jobs. In view of the anxiety of the large number of unemployed persons and also in view of the fact that the Government have set forth the rule that they will not give extension normally, will the Government give a categorical answer that Government servants of any category will not be given extension beyond the normal age of retirement?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தவரையில், திரு. வைகுந்த பட் என்ற ஒருவருக்குத்தான் மூன்று ஆண்டுகளுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஆக இருந்தவர். அந்தத் துறையிலே அவர்கள் இருந்திருந்தால் 58 ஆண்டுகள் வேலை பார்த்து இருக்கமுடியும். தலைமை நீதிபதியும், சட்டப்படிப்புத்துறை இயக்குநரும் சிபார்சு செய்ததன் பேரில் 58

ஆண்டு காலவரை நீடிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கல்வித்துறையிலே பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கு 58 ஆண்டு என்றும், நிர்வாகத் துறையிலே இருக்கிறவர்களுக்கு, அதாவது நான்-டெக்னிகல் ஸ்டாஃபுக்கு 55 வயது என்றும் இருக்கிறது. அந்த முறைதான் தொடர்ந்து நடைபெறுகிறது. கல்வித் துறையிலே பயிற்றுவிக்கின்ற துறையைச் சேர்ந்தவர்களின் ஓய்வுபெறும் காலம் கல்வி ஆண்டின் இடையிலே வருமானல் அந்தக் கல்வி ஆண்டு முடிகிறவரை அவர்களுக்கு நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது. வேறு எந்த வகையிலும் கொடுக்கப்படுவதில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் அவர்களுடைய ஓய்வு பெறும் காலத்தை நீட்டிப்பதற்கு அரசினர் கொடுக்கவில்லை. ஏற்கெனவே இருந்த துறையிலே அவர்கள் இருந்திருந்தால் 60 ஆண்டுகள் பணியாற்றி இருக்கலாம். இப்போது இடையிலே நீட்டிப்புக் கொடுக்கவில்லை என்பதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ஆலடி அருணா : கல்வித் துறையில் பயிற்றுவிக்கின்ற துறையிலே உள்ளவர்களுக்கு 58 வயதும், நிர்வாகத்துறையிலே இருப்பவர்களுக்கு 55 வயதும் இருப்பதால், பயிற்றுவிக்கின்ற துறையிலே உள்ளவர்கள் நிர்வாகத் துறைக்கு வர விரும்பாமல் இருக்கிறார்கள். இந்தப் பாகுபாட்டைப் போக்கப் பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கும், நிர்வாகத் துறையிலே இருக்கின்றவர்களுக்கும் ஒரே வகையான வயதை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பு இரண்டு துறைக்கும் ஒரே மாதிரியாகத்தான் வயது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கு 58 வயது என்றும் நிர்வாகத்துறையிலே இருப்பவர்களுக்கு 55 வயது என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது நிர்வாகத் துறையிலே ஈடுபட்டிருந்த அநேகம் பேர்கள் பயிற்றுவிக்கின்ற துறைக்குத் தாங்களே மாற்றிக்கொண்டுவிட்டார்கள்.

மனை இயல் படித்த ஆசிரியைகள்

*** 230 வினா.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மனை இயல் **B. T.** படித்த ஆசிரியைகள் விஞ்ஞான பாடம் சொல்லிக்கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்னும்